# <u>பத்திரிக்கைச் செய்தி</u>

**<u>மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் 67வது பிறந்தநாளை முன்னிட்டு நடைபெற்ற வேலைவாய்ப்பு முகாமில் பங்கேற்ற 670 இளைஞர்களுக்கு பணி நியமன ஆணைகளை மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு எஸ்.பி.வேலுமணி அவர்கள் காஞ்சிபுரத்தில் நடைபெற்ற விழாவில் வழங்கினார்.</u>**

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் 67வது பிறந்தநாளை முன்னிட்டு, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதாரத் திட்டம் மற்றும் புது வாழ்வுத் திட்டம் சார்பில் தனியார் நிறுவனங்களின் பங்களிப்புடன் 24.2.2015 அன்று சென்னையைத் தவிர்த்து அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டது. இந்த வேலைவாய்ப்பு முகாம்களில் 2,72,518 நபர்கள் கலந்து கொண்டனர். அவர்களில் தகுதி வாய்ந்த 58,560 ஆண்கள் மற்றும் 25,096 பெண்கள் என மொத்தம் 83,651 நபர்கள் பல்வேறு தனியார் நிறுவனங்களில் பணிபுரிய தெரிவு செய்யப்பட்டனர்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் பிறந்தநாளைக் கொண்டாடும் வகையில் நடத்தப்பட்ட இந்த வேலைவாய்ப்பு முகாம்களில், செல்பேசி பழுதுபார்த்தல் நிறுவனங்களில் 187 நபர்களும், கணினி நிறுவனங்களில் 9955 நபர்களும், கட்டுமான நிறுவனங்களில் 5998 நபர்களும், பின்னலாடை நிறுவனங்களில் 17,179 நபர்களும், சிறு தொழிற்சாலைகளில் 8118 நபர்களும், தனியார் வாகன ஓட்டுநர் பணிகளுக்கு 20,977 நபர்களும், மருத்துவ நிறுவனங்களில் 941 நபர்களும், அழகுக் கலை நிறுவனங்களில். 685 நபர்களும், கோழிவளர்ப்பு நிறுவனங்களில் 253 நபர்களும், கேட்டரிங் நிறுவனங்களில் 1806 நபர்களும், பல்பொருள் அங்காடிகளில் 6638 நபர்களும், சேவை நிறுவனங்களில் 6638 நபர்களும், பொது தனியார் நிறுவனங்களில் 4242 நபர்களும் என மொத்தம் 83,651 நபர்கள் வேலைவாய்ப்புக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கோயம்புத்தூரில் 24.2.2015 அன்று நடைபெற்ற வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொண்டு தெரிவு செய்யப்பட்ட அனைத்து இளைஞர்களுக்கும் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

திருச்சிராப்பள்ளியில் உள்ள தேவர் உறாலில் 2.3.2015 அன்று நடைபெற்ற விழாவில், திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல், கரூர், புதுக்கோட்டை, அரியலூர், பெரம்பலூர் மற்றும் தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 600 இளைஞர்களுக்கு, பல்வேறு தனியார் நிறுவனங்களில் பணியாற்ற, பணி நியமன ஆணைகளை, மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் வழங்கினார்.

காஞ்சிபுரத்தில் உள்ள அறிஞர் அண்ணா அரங்கத்தில் இன்று (10.3.2015) நடைபெற்ற விழாவில் காஞ்சிபுரம், வேலூர், திருவள்ளூர் மற்றும் திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 670 இளைஞர்களுக்கு, பல்வேறு தனியார் நிறுவனங்களில் பணியாற்ற, பணி நியமன ஆணைகளை மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் வழங்கினார்.

மேலும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களின் மூலம் தனிநபர் நிதி உதவி மற்றும் திறன்மேம்பாட்டுச் செயல்பாடுகள் மேற்கொள்ள சமுதாய முதலீட்டு நிதி உதவி, வங்கி நேரடி கடன் உதவி, கூட்டமைப்புகளுக்கு பெருங்கடன் உதவி, கூட்டமைப்புகளுக்கு ஊக்கத்தொகை உதவி, இளைஞர்களுக்கான தொழிற்திறன் பயிற்சி ஊக்கத்தொகை என நலத்திட்ட உதவியாக ரூ.9.15 கோடியை 670 பயனாளிகளுக்கு மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் வழங்கி, பின்வருமாறு உரையாற்றினார்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள், பெண்களின் வாழ்வாதாரத்தை உறுதிபடுத்திடவும், அவர்களின் பொருளாதாரத்தை முன்னேற்றிடவும், தமிழகத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்களை ஏற்படுத்தி, பெண்களின் வாழ்வில் திருப்புமுனை ஏற்படுத்தித் தந்துள்ளார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள், அன்று இட்ட விதை முளைத்து, ஆல் போல் தழைத்து, அருகு போல் வேரோடி, இன்று பெண்கள் வாழ்வில் பெரும் மறுமலர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ்நாட்டில் தற்போது, 5 இலட்சத்து 86 ஆயிரம் மகளிர் சுய உதவிக்குழுக்கள் உள்ளன. மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில், கடந்த 4 ஆண்டுகளில் மட்டும், 73,889 புதிய சுய உதவிக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தமிழகத்தில் தற்போது மகளிர் சுய உதவிக் குழுக்கள், 88 இலட்சத்து 70 ஆயிரம் மகளிர் உறுப்பினர்களைக் கொண்டு, மிகச் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு, கடந்த நான்கு ஆண்டுகளில், வங்கிகள் மூலம் 19,080 கோடி ரூபாய், கடன் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில், 5 ஆண்டுகளில், 9,245 கோடி ரூபாய் மட்டுமே வழங்கப்பட்டது. அதாவது மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு, கூடுதலாக 9,835 கோடி ரூபாய் வழங்கி, மகத்தான சாதனை படைக்கப்பட்டுள்ளது. மேலும், கடந்த 4 ஆண்டுகளில், 67,650 இளைஞர்களுக்கு தொழிற்திறன் வளர்ப்புப் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. தமிழகம் முழுவதும் 220 வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் முந்தைய ஆட்சிக் காலத்தில், **2005**ஆம் ஆண்டில், தமிழ்நாட்டில் வறுமையை ஒழித்திட, புதுவாழ்வு என்னும் புதுமைத் திட்டம் தொடங்கப்பட்டது. ஆனால், தமிழக மக்கள் புதுவாழ்வினைப் பெற்றிடக் கூடாது என்று நினைத்த, முந்தைய மைனாரிட்டி திமுக அரசு, அந்தப் பெயரையே மாற்றிவிட்டது. மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள், **2011** ஆம் ஆண்டில், ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், புதுவாழ்வுத் திட்டம் மீண்டும் முனைப்புடன் முடுக்கி விடப்பட்டுள்ளது.

புதுவாழ்வுத் திட்டத்தின் வாயிலாக, **1,06,401** சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டு, அதில் **15,96,000** மகளிர் உறுப்பினர்களாக உள்ளனர். சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு, கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும், **1,675** கோடி ரூபாய் கடன் இணைப்பு வழங்கி, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு மகத்தான சாதனை படைத்துள்ளது. புதுவாழ்வுத் திட்டத்தின் மூலம், இதுவரை 3,18,469 இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு, 2,63,811 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகள் பெற்றுத் தரப்பட்டுள்ளது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள், அறிமுகப்படுத்திய சீரிய திட்டமான, புதுவாழ்வு திட்டத்தின் சிறப்பான செயல்பாடுகளை, உலக வங்கியே பாராட்டியுள்ளது. இத்திட்டம் மற்ற மாநிலங்களுக்கும், பிற நாடுகளுக்கும், முன்னோடியாக உள்ளது.

இந்தியாவின் முதுகெலும்பாக வர்ணிக்கப்படும் இன்றைய இளைஞர்களை, விழிப்புணர்வு பெற்றவர்களாகவும், திறமைசாலிகளாகவும், வருமானம் ஈட்டுபவர்களாகவும் மாற்றி, அவர்களுக்கு புதிய வாழ்வை கொடுக்கும் நோக்கத்துடன், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் புது வாழ்வு திட்டத்தின் மூலம் அவர்களின் கல்வித் தகுதி மற்றும் விருப்பத்திற்கேற்ப தகுந்த

பயிற்சிகளைக் கண்டறிந்து, அவர்களுக்குப் பயிற்சி அளித்து, சிறந்த நிறுவனத்தில் வேலைவாய்ப்புப் பெற்று தரப்படுகிறது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் 2012ஆம் ஆண்டு முதல் துவக்கப்பட்டு, செயல்பட்டு வரும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பாக, 42,116 இளைஞர்களுக்கு, பல்வேறு தொழில்களில் பயிற்சிகள் அளிக்கப்பட்டு, பல்வேறு நிறுவனங்களில் வேலைவாய்ப்பும் பெற்றுத் தரப்பட்டுள்ளன.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் புதுவாழ்வு திட்டம் ஆகியவை இணைந்து இன்று நடத்தும், இந்த சிறப்பான விழாவில், காஞ்சிபுரம், வேலூர், திருவள்ளூர் மற்றும் திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 600 இளைஞர்களுக்கு, பல்வேறு தனியார் நிறுவனங்களில் பணியாற்ற, பணி நியமன ஆணைகள் வழங்குவதில் மிகவும் பெருமை கொள்கிறேன். மேலும் 670 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவியாக ரூ.9.15 கோடி வழங்குவதிலும் பெருமிதம் கொள்கிறேன்.

வேலைவாய்ப்பு ஆணைகள் மற்றும் நலத்திட்ட உதவிகளைப் பெற்ற அனைவரும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு தங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர்.

இந்த விழாவில் மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திரு டி.கே.எம்.சின்னையா, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு வி.சோமசுந்தரம், திரு வாலாஜாபாத் ப.கணேசன், திரு வி.எஸ்.இராஜீ, காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் திரு காஞ்சி பன்னீர்செல்வம், காஞ்சிபுரம் நகராட்சித் தலைவர் திருமதி மைதிலி திருநாவுக்கரசு, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் நிர்வாக

**இயக்குநர் திருமதி வி.அமுதவல்ளி,இ.ஆ.ப., காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் திரு வி.கே.சண்முகம், இ.ஆ.ப. மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.**